# Padasalai's Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group

https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group

https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group

https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group

https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group

https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group

https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group

https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group

https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group

https://t.me/Padasalai_1to5

- TET - Group

https://t.me/Padasalai_TET

- PGTRB - Group

https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group

https://t.me/Padasalai_TNPSC

# SHRI KRISHNA ACADEMY

**NEET,JEE & BOARD EXAM(10th,+1,+2) COACHING CENTRE**

**SBM SCHOOL CAMPUS, TRICHY MAIN ROAD,NAMAKKAL**

**CELL: 99655 31727 , 94432 31727**



# VIII - TAMIL

# NEW PATTERN MATERIAL

# 2019 – 2020

**DEPARTMENT OF TAMIL**



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

# இயல் - ஒன்று

# கவிதைப்பேழை

# கல்வி அழகே அழகு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. கற்றவருக்கு அழகு தருவது _________.
   அ ) தங்கம் ஆ) வெள்ளி இ) வைரம் **ஈ) கல்வி**
2. 'கலனல்லால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்ப து _________.
   அ) கலன் + லல்லா ல் ஆ) கலம் + அல்லால்
   **இ) கலன் + அல்லால்** ஈ) கலன் + னல்லால்

**கூடுதல் வினாக்கள்**

1. நீதி நெறி விளக்கம் ---------- வெண்பாக்களால் ஆனது.
   அ) 103 **ஆ) 102** இ) 104 ஈ) 105
2. நீதி நெறி விளக்கம் என்னும் நூலை எழுதியவர் ----------
   **அ) குமரகுருபர்** ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) ஆலங்குடி சோமு
3. மக்களின் வாழ்வுக்குத் தேவையான நீதிகளைச் சுட்டிக்காட்டும் நூலுக்கு ------ என்று பெயர்.
   அ) ஆத்திச்சூடி ஆ) பாரதியார் பாடல்கள் **இ) நீதிநெறி விளக்கம்** ஈ) கும்மிப்பாடல்கள்

**சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

1. அழகு – கல்வி கற்றவர்க்கு அவர் கற்ற கல்வியே **அழகு.**
2. கற்றவர் – இயற்கை கல்வியைக் **கற்றவர்** இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்த வல்லவர்.
3. அணிகலன் – ஒளிவீசும் மணிகளால் செய்யப்பட்ட **அணிகலன்** அழகாக உள்ளது.

**குறுவினா**

1. **யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?**

கல்வி கற்றவர்க்கு அவர் கற்ற கல்வியே அழகு தரும். ஆகையால் அவருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை.

**கூடுதல் வினா**

2. **குமரகுருபரர் எழுதிய நூல்கள் யாவை?**
   - கந்தர் கலிவெண்பா,
   - கயிலைக் கலம்பகம்,
   - சகலகலாவல்லி மாலை,
   - மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்,
   - முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்.

**சிறுவினா**

1. **நீதிநெறி விளக்கப்பாடல் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**
   - ஒளிரும் மணிகளால் செய்யப்பட்ட அணிகலனுக்கு மேலும் அழகூட்ட வேறு அணிகலன்கள் தேவையில்லை.
   - அதுபோலக் கல்வி கற்றவர்க்கு அவர் கற்ற கல்வியே அழகு தரும்.
   - ஆகையால் அழகு சேர்க்கும் பிற அணிகலன்கள் அவருக்குத் தேவையில்லை .


Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**சிந்தனை வினா**

1. **கல்வியின் பயன்களாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.**
   - மனிதன் விலங்கிலிருந்து மாறுபட்டு உயர்ந்து நிற்பதற்கு அடிப்படையாய் விளங்குவது கல்வி ஆகும்.
   - அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது கல்வி.
   - கல்வி கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.
   - கல்வி கற்றோர்க்கு அவர் கற்ற கல்வியே அணிகலன்.
   - தாம் பெற்ற கல்வி இன்பத்தைப் பிறருக்கும் கொடுத்து உதவலாம்.

# கவிதைப்பேழை
# புத்தியைத் தீட்டு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. என் நண்பர் பெரும் புலவராக இருந்த போதும் _ _ _ _ _ இன்றி வாழ்ந்தார் .
   அ) சோம்பல் **ஆ) அகம்பாவம்** இ) வருத்தம் ஈ) வெகுளி
2. 'கோயிலப்பா ' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்ப து _ _ _ _ _ .
   அ) கோ + அப்பா ஆ) கோயில் + லப்பா **இ) கோயில் + அப்பா** ஈ) கோ + இல்லப்பா
3. பகைவன் + என்றாலும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _ _ _ _ _ .
   அ) பகைவென்றாலும் **ஆ) பகைவனென்றாலும்**
   இ) பகைவன்வென்றாலும் ஈ) பகைவனின்றாலும்

**கூடுதல் வினாக்கள்**

1. "அகம்பாவம்" என்னும் சொல்லின் பொருள் ----------
   அ) பாவம் ஆ) கோபம் **இ) செருக்கு** ஈ) வெகுளி
2. ஆத்திரம் கண்ணை மறைத்திடும்போது -------- க்கு வேலை கொடுக்க வேண்டும்.
   **அ) அறிவு** ஆ) அழகு இ) கண் ஈ) கால்
3. "தெளிவாகும்" என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது
   **அ) தெளிவு +ஆகும்** ஆ) தெளிவு +பாகும் இ) தெளிவு +வாகும் ஈ) தெ+ஆகும்
4. தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது பெற்றவர் --------
   **அ) ஆலங்குடி சோமு** ஆ) குமரகுருபரர் இ) திரு.வி.க. ஈ) பி.ச. குப்புசாமி

**குறுவினா**

1. **யாருடைய உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது?**
   மன்னிக்கத் தெரிந்த மனிதனின் உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது.
2. **பகைவர்களிடம் நாம் நடந்து கொள்ள வேண்டிய முறை யாது?**
   பகைவர்களிடம் நாம் அன்பாக நடந்து கொள்ள வேண்டும்.

**கூடுதல் வினா**

1. **ஆலங்குடி சோமு – சிறுகுறிப்பு வரைக.**
   - சிவகங்கை மாவட்டத்திலுள்ள ஆலங்குடி என்னும் ஊரில் பிறந்தவர்.
   - திரைப்படப்பாடல் ஆசிரியராகப் புகழ்பெற்றவர்.
   - தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது பெற்றவர்.


Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**சிறுவினா**

1. **புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?**
   - கண்ணியம் தவறாமல் திறமையைக் காட்ட வேண்டும்.
   - ஆத்திரம் கண்ணை மறைத்திடும் போது அறிவுக்கு வேலை கொடுத்திட வேண்டும்.
   - உன்னை அழித்திட வந்த பகைவன் என்றாலும் அன்பாய் நடந்துகொள்ள வேண்டும்.
   - மன்னிக்கத் தெரிந்த மனிதனின் உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது.
   - மன்னிக்க மறந்தவன் வாழ்வு தடம் தெரியாமல் அழிந்து விடும். அதனால் மன்னிக்கக் கற்றுக்கொள்.
   - இங்கே இருப்பது சிலகாலம். அகம்பாவத்தால் ஒரு நன்மையும் இல்லை. அதனால் அகம்பாவம் கொள்ளாதே.
   - இவையே புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவனவாகும்.

**சிந்தனை வினா**

1. **உங்கள் மீது பிறர் வெறுப்புக் காட் டினால் அவர்களை எவ்வாறு எதிர்கொள்வீர்கள்?**
   - என்மீது யாராவது வெறுப்புக் காட்டினால் சினம் கொள்ள மாட்டேன்.
   - அவர்களை மன்னித்து விடுவேன்.
   - அவர்களின் தவற்றை நயமாய்ச் சுட்டிக்காட்டி அவர்களைத் திருத்த முயற்சி செய்வேன்.
   - அவர்கள் மீது அன்பு காட்டி அவர்களையும் அன்புப்பாதைக்கு அழைத்து வருவேன்.

## கற்றவை கற்றபின்

**அறிவின் பெருமையை விளக்கும் பழமொழிகளைத் திரட்டுக.**

- அறிவே தெய்வம்
- அறிவு ஒன்றுதான் அச்சத்தை முறிக்கும் அரிய மருந்து
- அறிவே ஆற்றல்
- கற்ற அறிவையும், பெற்ற செல்வத்தையும் இறுதிக்காலம்வரை மற்றவர்களுக்காகச் செலவிடுங்கள்
- அன்புடன் கூர்மையான அறிவும் சேர்ந்துவிட்டால் அதனால் அடைய முடியாதது உலகில் எதுவும் இல்லை.

Padasalai

# உரைநடை உலகம்
# பல்துறைக் கல்வி

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது ______.
   அ) விளக்கு **ஆ) கல்வி** இ) விளையாட்டு ஈ) பாட்டு
2. கல்விப் பயிற்சிக்குரிய பருவம் ______.
   **அ) இளமை** ஆ) முதுமை இ) நேர்மை ஈ) வாய்மை
3. இன்றைய கல்வி ______ நுழைவதற்குக் கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது.
   அ) வீட்டில் ஆ) நாட்டில் இ) பள்ளியில் **ஈ) தொழிலில்**



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

## கூடுதல் வினாக்கள்

1. திரு.வி.க -----------என்று அழைக்கப்படுகிறார்.
   அ) புரட்சிக்கவி **ஆ) தமிழ்த்தென்றல்** இ) மகாகவி ஈ) கவிமணி
2. இளமை விருந்து என்ற நூலை எழுதியவர்
   **அ) திரு.வி.க** ஆ) குமரகுருபரர் இ) பாரதியார் ஈ) பாரதிதாசன்
3. இயற்கை வாழ்வில்லம் என்று அழைக்கப்படும் நூல் ----------- ஆகும்.
   அ) பத்துப்பாட்டு ஆ) கலித்தொகை **இ) திருக்குறள்** ஈ) சிந்தாமணி

### நிரப்புக.

1. கலப்பில் **வளர்ச்சி** உண்டென்பது இயற்கை நுட்பம்.
2. புற உலக ஆராய்ச்சிக்கு **அறிவியல்** கொழுகொம்பு போன்றது.
3. வாழ்விற்குரிய இன்பத்துறைகளில் தலையாயது **காவிய** இன்பம் ஆகும்.

## கூடுதல் வினாக்கள்

1. **இயற்கைக்** கல்வி பயில்வீர்களானால் இயற்கையோடு இயைந்த வாழ்வை வாழ்வீர்கள்.
2. மனிதன் விலங்கிலிருந்து மாறுபட்டு உயர்ந்து நிற்பதற்கு அடிப்படையாய் விளங்குவது **கல்வி** ஆகும்.
3. நாம் நமது **தாய்மொழி** வாயிலாகக் கல்வி பெறுவது சிறப்பு.

### பொருத்துக.

1. இயற்கை ஓவியம் - பத்துப்பாட்டு
2. இயற்கை தவம் - சிந்தாமணி
3. இயற்கைப் பரிணாமம் - கம்பராமாயணம்
4. இயற்கை அன்பு - பெரியபுராணம்

Padasalai

### குறுவினா

1. **இன்றைய கல்வியின் நிலை பற்றித் திரு. வி. க. கூறுவன யாவை?**
   - இந்நாளில் கல்வியென்பது பொருளற்றுக் கிடக்கிறது.
   - குறிப்பிட்ட பாடங்களை நெட்டுருச் செய்து, தேர்வில் தேறிப் பட்டம் பெற்று, ஒரு தொழிலில் நுழைவதற்குக் கல்வி ஒரு கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது.
   - நாளடைவில் அக்கல்விக்கும் வாழ்விற்கும் தொடர்பில்லாமல் போகிறது.
2. **தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?**
   - தாய்நாடு என்னும் பெயர் தாய்மொழியைக் கொண்டே பிறக்கிறது.
3. **திரு. வி. க. சங்கப் புலவர்களாகக் குறிப்பிடுபவர்களின் பெயர்களை எழுதுக.**
   - இளங்கோ ,
   - திருத்தக்கத்தேவர் ,
   - திருஞானசம்பந்தர் ,
   - ஆண்டாள்,
   - சேக்கிழார் ,
   - கம்பர் ,
   - பரஞ்சோதி முனிவர்


Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

## சிறுவினா

1. **தமிழ் வழிக் கல்வி பற்றித் திரு. வி. க. கூறுவனவற்றை எழுதுக.**
**தமிழ்வழிக்கல்வி**
   - தமிழிலேயே கல்வி போதிக்கத் தமிழில் போதிய கலைகளில்லையே ; சிறப்பான அறிவியல் கலைகளில்லையே என்று சிலர் கூக்குரலிடுகிறார் .
   - அவரவர் தாம் கண்ட புதுமைகளை முதல் முதல் தம் தாய்மொழியில் வரைந்து விடுகிறார். அவை பின்னே பல மொழிகளில் பெயர்த்து எழுதப்படுகின்றன.
   - அம்மொழிபெயர்ப்பு முறையைத் தமிழர் கொண்டு தாய்மொழியை வளர்த்தல் வேண்டும்.
   - குறியீடுகளுக்குப் பல மொழிகளினின்றும் கடன் வாங்குவது தமிழுக்கு இழுக்காகாது .
   - கலப்பில் வளர்ச்சியுண்டென்பது இயற்கை நுட்பம்.
   - தமிழை வளர்க்கும் முறையிலும் அளவிலும் கலப்பைக் கொள்வது சிறப்பு.
   - தமிழ்மொழியில் அறிவுக்கலைகள் இல்லை என்னும் பழம்பாட்டை நிறுத்தி, அக்கலைகளைத் தமிழில் பெயர்த்து எழுதித் தாய்மொழிக்கு ஆக்கந்தேடுவோம்.
   - கலைகள்யாவும் தாய்மொழி வழி மாணாக்கர்க்கு அறிவுறுத்தப் பெறுங்காலமே , தமிழ்த்தாய் மீண்டும் அரியாசனம் ஏறும் காலமாகும்.

2. **அறிவியல் கல்வி பற்றித் திரு. வி. க. கூறுவன யாவை?**
   - உலக வாழ்விற்கு மிக மிக இன்றியமையாதது 'அறிவியல்' என்னும் அறிவுக்கலை .
   - உடற்கூறு, உடலோம்பு முறை , பூதபௌதிகம், மின்சாரம், நம்மைச் சூழ்ந்துள்ள செடி, கொடி, பறவை, விலங்கு முதலியவற்றினியல், கோளியக்கம், கணிதம், அகத்திணை முதலியன வேண்டும்.
   - இந்நாளில் இவைகளைப் பற்றிய பொது அறிவாதல் பெற்றே தீரல் வேண்டும். புற உலக ஆராய்ச்சிக்கு அறிவியல் கொழுகொம்பு போன்றது.
   - நம் முன்னோர் கண்ட பல உண்மைகள் அறிவியல் அரணின்றி இந்நாளில் உறுதிபெறல் அரிது.
   - இக்கால உலகத்தோடு உறவு கொள்வதற்கும் அறிவியல் தேவை. ஆதலின் அறிவியல் என்னும் அறிவுக்கலை இளைஞருலகில் பரவல் வேண்டும்.

Padasalai

## கூடுதல் வினா

1. **திரு.வி.கா. – சிறுகுறிப்பு வரைக.**
   - திரு.வி.க. என்று அனைவராலும் குறிப்பிடப்படும் திருவாரூர் விருத்தாசலம் கலியாணசுந்தரனார் அரசியல், சமுதாயம், சமயம், தொழிலாளர் நலன் எனப் பல துறைகளிலும் ஈடுபாடு கொண்டவர் ஆவார்.
   - சிறந்த மேடைப் பேச்சாளரான இவர் தமிழ்த்தென்றல் என்று வழங்கப்படுகிறார்.
   - இவர், மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்,பெண்ணின் பெருமை, தமிழ்ச்சோலை, பொதுமை வேட்டல், முருகன் அல்லது அழகு உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

## நெடுவினா

1. **காப்பியக் கல்வி குறித்துத் திரு. வி. க. கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**
   - வாழ்விற்குரிய இன்பத்துறைகளுள் காவிய இன்பமும் ஒன்று.
   - நாம் தமிழர்கள். நாம் பாட்டின்பத்தை நுகர தமிழில் இலக்கியங்கள் பலப்பல இருக்கின்றன.
   - இயற்கை ஓவியம் பத்துப்பாட் டு, இயற்கை இன்பக்கலம் கலித்தொகை , இயற்கை வாழ்வில்லம் திருக்குறள், இயற்கை இன்பவாழ்வு நிலையங்கள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும், இயற்கைத் தவம் சிந்தாமணி, இயற்கைப் பரிணாமம் கம்பராமாயணம், இயற்கை அன்பு பெரியபுராணம் , இயற்கை இறையுறையுள் தேவார



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

திருவாசக திருவாய் மொழிகள் போன்ற தமிழ்க் கருவூலங்களை உன்ன உன்ன உள்ளத்தெழும் இன்ப அன்பைச் சொல்லால் சொல்ல இயலாது.

- ❖ பெறற்கரிய இன்ப நாட்டில் பிறக்கும் பேறு பெற்றிருக்கிறீர்கள்! தமிழ் இன்பத்திலுஞ் சிறந்த இன்பம் இவ்வுலகிலுண்டோ? தமிழ்க் காவியங்களைப் படியுங்கள். இன்பம் நுகருங்கள் என்கிறார் திரு.வி.க.

## சிந்தனை வினா

**1. திரு. வி. க. குறிப்பிடும் பல்துறைக் கல்வியில் நீங்கள் எதனைக் கற்க விரும்புகிறீர்கள்?**

- ❖ திரு.வி.க. குறிப்பிடும் பல்துறைக் கல்வியில் நான் இசைக்கல்வியைக் கற்க விரும்புகிறேன்.
- ❖ இயற்கையாகவே இனிய குரல்வளம் கொண்ட எனக்கு இசைத்துறையின்மீது அதிக ஆர்வம் உண்டு.
- ❖ இசைக்கல்லூரியில் சேர்ந்து முறைப்படி இசைக்கல்வி பயின்று, சிறந்த நாட்டுப்புற இசைக்கலைஞராய் வர விரும்புகிறேன்.
- ❖ பழமையையும் புதுமையையும் ஒன்றிணைத்து, புதிய வடிவில் நாட்டுப்புறப் பாடல்களைப் பாடவேண்டும்.
- ❖ இசையால் மட்டுமே நாமும் மகிழ்ந்து பிறரையும் மகிழ்விக்க முடிகிறது.
- ❖ நோய்களையும் போக்கும் மருந்தாய் இசை விளங்குவதால் நான் இசைக்கல்வியையே பயில விரும்புகிறேன்.

## கற்பவை கற்றபின்

**பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் ஆகிய தொகுப்புகளில் இடம்பெறும் நூல்களின் பெயர்களைத் திரட்டி எழுதுக.**

Padasalai

### பத்துப்பாட்டு

1. திருமுருகாற்றுப்படை
2. பொருநராற்றுப்படை
3. சிறுபாணாற்றுப்படை
4. பெரும்பாணாற்றுப்படை
5. முல்லைப்பாட்டு
6. மதுரைக்காஞ்சி
7. நெடுநல்வாடை
8. குறிஞ்சிப்பாட்டு
9. பட்டினப்பாலை
10. மலைபடுகடாம்

### எட்டுத்தொகை

1. நற்றிணை
2. குறுந்தொகை
3. ஐங்குறுநூறு
4. பதிற்றுப்பத்து
5. பரிபாடல்
6. கலித்தொகை
7. அகநானூறு
8. புறநானூறு

### பதினெண்கீழ்க்கணக்கு

1. நாலடியார்
2. நான்மணிக்கடிகை
3. இன்னா நாற்பது
4. இனியவை நாற்பது
5. களவழி நாற்பது
6. கார்நாற்பது
7. ஐந்திணை ஐம்பது
8. திணைமொழி ஐம்பது
9. ஐந்திணை எழுபது
10. திணைமாலை நூற்றைம்பது
11. திருக்குறள்
12. திரிகடுகம்
13. ஆசாரக்கோவை
14. பழமொழி நானூறு
15. சிறுபஞ்சமூலம்
16. முதுமொழிக்காஞ்சி
17. ஏலாதி
18. கைந்நிலை



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

# விரிவானம்

# ஆன்ற குடிப்பிறத்தல்

***திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக.***

**முன்னுரை :**

*மனிதனின் உள்ளத்தில் புதைந்துகிடக்கும் நற்பண்புகளை வெளிக்கொண்டு வருவதும் அவனது வாழ்வில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்துவதும் கல்வியின் நோக்கங்களாகும். ஒரு மாணவனின் உள்ளத்தில் ஆசிரியர் விதைத்த விதை எவ்வாறு பயன் தந்தது என்பதை ஒரு நிகழ்வின் மூலம் அறியலாம்.*

**தலைமையாசிரியர் :**

*ஒரு சிற்றூரில் ஓர் எளிய குடிசை வீட்டில் தலைமையாசிரியர் தம் மனைவியோடு வசித்து வந்தார். ஒரு நாள் காலை ஆசிரியர், பள்ளிக்குப் புறப்படுமுன் தமது எட்டுமுழ வேட்டியைத் தும்பைப்பூ போல் துவைத்து, மெலிதாய் நீலம்போட்டு, மூங்கில் கம்புகளுக்கு இடையே கொடிக்கயிற்றில் காயப்போட்டுவிட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டார்.*

**வேட்டியைக் காணவில்லை:**

*பிறகு வந்து பார்த்தபோது வாசலில் காயப்போட்டிருந்த வேட்டியைக் காணவில்லை. ஆசிரியரின் வேட்டியைக் காணவில்லை என்கிற செய்தி அன்று மாலைக்குள் ஊர்மக்கள் சிலரிடையே பரவிப் பலவாறான கற்பனையை உற்பத்தி செய்துவிட்டது. பெரும்பாலோர் சேர்ந்து, "சிகாமணிதான் எடுத்திருப்பான்" என்றனர். சிகாமணியைப் பற்றி அறிந்த பலரும் அவன்தான் வேட்டியை எடுத்திருப்பான் என்று உறுதிபடக் கூறினர். சிகாமணியின் தந்தை "பண்டுக்கிழவரும்" ஒருமாதிரிதான்.*

**சகாதேவன்:**

*சிகாமணியின் மகன் சகாதேவன் தலைமையாசிரியரிடம் நான்காம் வகுப்புப் பயில்கிற மாணவன். மறுநாள் பள்ளியில் நான்காவது வகுப்பில் செய்யுள் பகுதியில் திருக்குறள் வந்திருந்தது. அதில் பண்புடைமை அதிகாரத்திலிருந்து*

***அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்***
***பண்புடைமை என்னும் வழக்கு.***

*என்னும் குறளைத் தலைமையாசிரியர் நடத்தினார். மாணவர்களிடம் படித்துக் காட்டி தலைமையாசிரியர் அதற்குப் பொருள் சொல்லப்போனபோது, அவருக்கு அந்தப் பொறிதட்டியது.*

**தலைமையாசிரியரின் பொருள்:**

*"அன்புடையவர்களாயிருப்பதும், சிறந்த குடியில் பிறந்திருப்பதும் பண்புடைமை என்று சொல்லப்படும்" என்று குறிப்பிட்ட தலைமையாசிரியருக்கு அன்புடைமையை ஒப்பிய மனம் "ஆன்ற குடிப்பிறத்தலில்" என்னவோ ஆழமாய் நெருடியது.*

*"சிறந்த குடியில் பிறப்பது அவரவர் கையிலா இருக்கிறது,? நற்பண்பு இல்லாத பெற்றோருக்குப் பிறந்த ஒருவர், நற்பண்புடையவராய் ஆக மாட்டாரா? என்று எண்ணிய அவர், "ஆன்ற குடிப்பிறத்தல் என்றால், சிறந்த குடி உன்னிடமிருந்து பிறக்க வேண்டும் என்று பொருள் கூறினார்.*

*சிகாமணியின் மகன் சகாதேவன், தலைமையாசிரியர் பாடம் நடத்தும்போது அடிக்கடி அவர் கண்ணில் பட்டுக்கொண்டிருந்தான். தலைமையாசிரியர் தொடர்ந்தார்.*

*"அப்பன் திருடனாயிருந்தால் மகன் நல்லவனாய் இருப்பான். எனவே, திருட்டுப்பழக்கம் அப்பனோடு முடியட்டும். திருடாதவன் என்னும் ஒரு புதிய குடியை மகன் உருவாக்க வேண்டும். ஒரு புதிய தலைமுறை அவனிலிருந்து தொடங்குவதும் பண்புடைமை என்ற சொல்லப்படும்". இவ்வாறு அக்குறளுக்குப் பொருள் சொல்லி முடித்தார், தலைமையாசிரியர்.*

*அன்று மதிய உணவிற்கு வீட்டிற்குச் சென்ற தலைமையாசிரியரை அவ்வூரைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி என்ற இளைஞன் சந்தித்து, சகாதேவன் கொடுத்ததாய் வாத்தியார் வேட்டியைக் கொடுத்தான்.*

*"சார்! இன்னைக்குக் காத்தாலே நீங்க ஏதோ பாடம் நடத்தினீங்களாமே! அதைக் கேட்டுவிட்டு வந்த சகாதேவன், அவங்க அப்பன் எடுத்து வைத்திருந்த உங்க வேட்டியை என்னைக்*



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

கொண்டுபோய்க் கொடுத்திடச் சொன்னான்" என்று சொல்லி சிரித்தவாறு நின்றான், கிருஷ்ணமூர்த்தி.

**முடிவுரை :**

தலைமையாசிரியர் மகிழ்ச்சியடைந்ததோடு மட்டுமின்றி, உண்மையின் நாற்றொன்று ஊன்றி நடப்பட்ட உற்சாகம் அவருக்குப் பிறந்தது. ஆனால், சற்று நேரத்தில் வேறொரு பிரச்சினை முளைத்தது. ஊரார், "இந்தப் பிரச்சினையைச் சும்மா விடக்கூடாது, சிகாமணிக்கு அபராதம் போடவேண்டும்" என்றார்கள். தலைமையாசிரியர் சிகாமணியின் மகன் சகாதேவனின் நிலையை நினைத்துப் பார்த்தார். "நம் வாத்தியார் சொன்ன பாடம் நல்ல பாடம்னு நெனச்சோமே! இப்படி ஆயிடுச்சே! குருவின்சொற்படி நடந்து, கண்ட பலன் இதுதான்" என்று அவன் மனம் நம்பிக்கை இழக்குமே என்று எண்ணி, ஊர் மக்களிடம் எடுத்துக்கூறி, அவர்களைத் தம் கருத்திற்கு உடன்பட வைத்தார், தலைமையாசிரியர்.

# கற்கண்டு

## வேற்றுமை

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது __________ ஆகும்.
அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள் இ) பயனிலை **ஈ) வேற்றுமை**
2. எட்டாம் வேற்றுமை ____________ வேற்றுமை என்று அழைக்கப்படுகிறது.
அ) எழுவாய் ஆ) செயப்படு பொருள் **இ) விளி** ஈ) பயனிலை
3. உடனிகழ்ச்சிப் பொருளில் ______________ வேற்றுமை வரும்.
**அ) மூன்றாம்** ஆ) நான்காம் இ) ஐந்தாம் ஈ) ஆறாம்
4. 'அறத்தான் வருவதே இன்பம்' – இத்தொடரில் ______ வேற்றுமை பயின்று வந்துள்ளது.
அ) இரண்டாம் **ஆ) மூன்றாம்** இ) ஆறாம் ஈ) ஏழாம்
5. 'மலர் பானையை வனைந்தாள்' – இத்தொடர் _________ பொருளைக் குறிக்கிறது.
**அ) ஆக்கல்** ஆ) அழித்தல் இ) கொடை ஈ) அடைதல்

### கூடுதல் வினாக்கள்

1. பெயர்ச் சொல்லுடன் இணைக்கப்படும்அசைகளை ----------- என்று கூறுவர்.
அ) வேற்றுமை **ஆ) வேற்றுமை உருபுகள்** இ) சொல்லுருபுகள் ஈ) பெயரெச்சம்
2. -------- வேற்றுமையை செயப்படு பொருள் வேற்றுமை என்று கூறுவர்
**அ) இரண்டாம் வேற்றுமை** ஆ) மூன்றாம் வேற்றுமை
இ) நான்காம் வேற்றுமை ஈ) முதல் வேற்றுமை
3. வேற்றுமை உருபுகள் இடம்பெற வேண்டிய இடத்தில் அஃது இடம்பெறாமல் மறைந்திருந்து பொருள் தந்தால் அதனை --------- என்பர்.
அ) வேற்றுமை உருபு ஆ) வேற்றுமை சொல்லுருபு
**இ) வேற்றுமைத் தொகை** ஈ) இரண்டாம் வேற்றுமை
4. ஆறாம் வேற்றுமை -------- பொருளில் வரும்.
**அ) உரிமை(கிழமை)** ஆ) உடனிகழ்ச்சி இ) விளி ஈ) இடப்பொருள்
5. வேற்றுமை ----- வகைப்படும்.
அ) ஐந்து ஆ) ஆறு இ) ஏழு **ஈ) எட்டு**



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

**பொருத்துக.**

1. மூன்றாம் வேற்றுமை - மண்ணால் குதிரை செய்தான்.
2. நான்காம் வேற்றுமை - இராமனுக்குத் தம்பி இலக்குவன்.
3. ஐந்தாம் வேற்றுமை - ஏவுதல் கலையில் சிறந்தவன் ஏகலைவன்.
4. ஆறாம் வேற்றுமை - பாரியினது தேர்.

**சிறுவினா**

1. **எழுவாய் வேற்றுமையை விளக்குக.**
   - ❖ எழுவாயுடன் வேற்றுமை உருபுகள் எதுவும் இணையாமல் எழுவாய் தனித்து நின்று இயல்பான பொருளைத் தருவது முதல் வேற்றுமை ஆகும்.
   - ❖ முதல் வேற்றுமையை எழுவாய் வேற்றுமை என்றும் குறிப்பிடுவர் .
   - ❖ (எ.கா .) பாவை வந்தாள்.

2. **நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் யாவை?**

   நான்காம் வேற்றுமை கொடை , பகை , நட்பு, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை , எல்லை எனப் பலபொருள்களில் வரும்.

3. **உடனிகழ்ச்சிப் பொருள் என்றால் என்ன?**

   ஒரு பொருளின் தொழிலோடு மற்றொன்றன் தொழில் சேர்ந்து நிகழ்வது உடனிகழ்ச்சி பொருள் எனப்படும்.

Padasalai

## மொழியை ஆள்வோம்

**கீழ்க்காண்பவற்றுள் ஒரு சொல்லை எடுத்து ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களுடன் இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மா | தேன் | மலர் | செம்மை | சிட்டு | கனி |
| குருவி | இலை | காய் | கூடு | முட்டை | மரம் |

1. மா + மரம் = மாமரம்
2. மா + இலை = மாவிலை
3. மா + கனி = மாங்கனி
4. மா + காய் = மாங்காய்
5. தேன் + கூடு = தேன்கூடு
6. குருவி + கூடு = குருவிக்கூடு
7. செம்மை + மரம் = செம்மரம்
8. சிட்டு + குருவி = சிட்டுக்குருவி
9. குருவி + முட்டை =குருவிமுட்டை
10. செம்மை + மலர் = செம்மலர்



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

## பின்வரும் தொடர்களில் உரிய இடங்களில் நிறுத்தக் குறிகளை இடுக.

1. பூக்கள் நிறைந்த இடம் சோலை ஆகும்
   பூக்கள் நிறைந்த இடம் சோலை ஆகும்.
2. திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் பகுப்பு கொண்டது
   திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பகுப்பு கொண்டது.
3. தமிழ்மொழி செம்மையானது வலிமையானது இளமையானது
   தமிழ்மொழி செம்மையானது; வலிமையானது; இளமையானது.
4. கபிலன் தன் தந்தையிடம் இன்று மாலை விளையாடப் போகட்டுமா என்று கேட்டான்
   கபிலன் தன் தந்தையிடம், "இன்று மாலை விளையாடப் போகட்டுமா?" என்று கேட்டான்.
5. திரு வி க எழுதிய பெண்ணின் பெருமை என்னும் நூல் புகழ் பெற்றது
   திரு. வி. க. எழுதிய 'பெண்ணின் பெருமை' என்னும் நூல் புகழ் பெற்றது.

## பின்வரும் பத்தியில் உரிய இடங்களில் நிறுத்தக் குறிகளை இடுக.

'நூல் பல கல்' என்பர், பெரியோர். அறிவை வளர்க்கும் நூல்கள் அனைத்தையும் நம்மால் விலை கொடுத்து வாங்க முடியுமா? முடியாது. நூலகங்கள் இக்குறையை நீக்க உதவுகின்றன. பல்வேறு துறைகளைச் சேர்ந்த அனைத்து நூல்களும் நிறைந்த இடம் நூலகம் ஆகும். நூலகத்தின் வகைகளாவன : மையநூலகம், மாவட்ட நூலகம், கிளை நூலகம், ஊர்ப்புற நூலகம். "எனக்குப் பிடித்த நூல்களுடன் வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைத்தாலும் மகிழ்ச்சியடைவேன்," என்றார் நேரு. ஆகவே, நூலகத்தின் பயன் அறிவோம், அறிவு வளம் பெறுவோம்.

## கீழ்க்காணும் விளம்பரத்தைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.




1. **எந்த நாளை முன்னிட்டுப் புத்தகக்கண்காட்சி நடத்தப்படுகிறது?**
   உலகப் புத்தக நாளை முன்னிட்டு புத்தகக்கண்காட்சி நடத்தப்படுகிறது.
2. **புத்தகக் கண்காட்சி எங்கு நடைபெறுகிறது?**
   புத்தகக் கண்காட்சி இராயப்பேட்டை YMCA மைதானத்தில் நடைபெறுகிறது.
3. **புத்தகக் கண்காட்சி எத்தனை நாள்கள் நடைபெறுகிறது?**
   புத்தகக் கண்காட்சி ஏப்ரல் 13 முதல் 23 வரை 11 நாள்கள் நடைபெறுகிறது.
4. **புத்தகக் கண்காட்சிக்கான நுழைவுக் கட்டணம் எவ்வளவு?**
   புத்தகக் கண்காட்சிக்கான நுழைவுக் கட்டணம் இல்லை, அனுமதி இலவசம்.
5. **புத்தகம் வாங்குவோருக்கு வழங்கப்படும் சலுகை யாது?**
   புத்தகம் வாங்குவோருக்கு வழங்கப்படும் சலுகை 10% தள்ளுபடி ஆகும்.

# கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

## நூலகம்

முன்னுரை – நூலகத்தின் தேவை – வகைகள் – நூலகத்திலுள்ளவை – படிக்கும் முறை – முடிவுரை .

**குறிப்புச்சட்டகம்**

- முன்னுரை
- நூலகத்தின் தேவை
- வகைகள்
- நூலகத்திலுள்ளவை
- படிக்கும் முறை
- முடிவுரை

**முன்னுரை :**

ஒரு நூலகம் திறக்கப்படும்போது ஒரு சிறைச்சாலை மூடப்படுகின்றது" என்னும் பொன்மொழி நூலகத்தைப் பயன்படுத்த வேண்யடிதன் அவசியத்தை நமக்கு எடுத்துரைக்கின்றது. "நூல் பல கல்" என்னும் ஔவையின் அமுத மொழியும் இதற்குச் சான்றாய் விளங்குகிறது. உயர்ந்த வாழ்க்கை நெறியையும் அறிவுச் செல்வத்தையம் அள்ளித்தரும் நூலகம் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**நூலகத்தின் தேவை :**

"ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்பது பழமொழி. அதுபோல, "நூலகமில்லா ஊருக்கு அறிவு பாழ்" என்னும் பழமொழியும் உண்டு. தனியார் நூலகத்தில் உள்ள நூல்களைப்பொதுமக்கள் பயன்படுத்த முடியாததால் அனைவரும் பயன்படுத்தும் வகையில் பொதுநூலகங்கள் அமைக்கப்பட்டன.

பள்ளியில் பாடநூல்களைத்தவிர மாணவர்கள் அறிவை வளர்த்துச் செழுமைப்படுத்தப் "புத்தகப் பூங்கொத்து" என்னும் நூலகத்திட்டம் உள்ளது.

**வகைகள் :**

நூலகத்தைப் பள்ளி நூலகம், பொதுநூலகம், எனப்பிரித்துக் கூறலாம். இவை தவிரக் கல்லூரி நூலகங்கள், பல்கலைக்கழக நூலகங்கள் , ஆராய்ச்சி நூலகங்கள், சிறப்பு நூலகங்கள், தேசிய நூலகங்கள், வீட்டு நூலகங்கள் எனப் பல்வேறு நூலகங்கள் உள்ளன.

**நூலகத்திலுள்ளவை :**

நூலகத்தில் நூல்கள் பல்வேறு தலைப்புகளில், முறைப்படி வரிசைப்படுத்தப்பட்டு அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. இலக்கியம், அறிவியல், வரலாறு, கவிதை, சிறுகதை, ஆய்வுநூல், அரசியல், ஆன்மிகம், புதினங்கள், கட்டுரைகள் எனப் பல்வேறு நூல்களும் அங்கே எளிதாக எடுத்துப் படிக்கும்வண்ணம் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

**படிக்கும் முறை :**

அமைதியின் உறைவிடமாய்த் திகழ்வது நூலகமாகும். நாம் உள்ளே சென்றதிலிருந்து வெளியே வரும்வரை அமைதி காத்தல் இன்றியமையாததாகும். நூல்களை எடுக்கும் போதும் படித்துவிட்டு வைக்கும்போதும், வரிசை மாறாமல் வைக்கவேண்டும். நூல்களைப் படித்துவிட்டுக் கிழிந்துவிடாமலும், கசங்கிவிடாமலும் பக்குவமாய்க் கையாள வேண்டும். உறுப்பினர் கட்டணம் செலுத்தி நூல்களை இல்லத்திற்கு எடுத்துச் சென்று படித்துவிட்டுப் பதினைந்து நாள்களுக்குள் கொடுத்துவிட வேண்டும்.

**முடிவுரை :**

எத்துறை சார்ந்த நூல்களையும் செலவின்றிப் படித்துப் பயன்பெற உதவும் அறிவுக்கருவூலமாய் நூலகம் விளங்குகிறது. வாழ்வில் வெற்றி பெற நூலகத்தைத் தொடர்ந்து பயன்படுத்துவோம். அறிவு வளரவும், ஆற்றல் மிளிரவும் நூல்களைப் பேணிக் காக்கும் நூலகங்களைப் போற்றிப் பாதுகாப்போம்.



Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

# மொழியோடு விளையாடு

கீழ்க்காணும் வினாக்களுக்கு விடைகளைக் கட்டத்தில் நிரப்புக. வட்டத்தில் சிக்கிய எழுத்துகளை எடுத்து எழுதுக. எழுத்துகளை முறைப்படுத்திக் கல்வி பற்றிய பழமொழியைக் கண்டறிக.

1. திரைப்படப் பாடலாசிரியர் சோமுவின் ஊர். 2. கேடில் விழுச்செல்வம் _ _ _ _.
3. குமரகுருபரர் எழுதிய நூல்களுள் ஒன்று.
4. 'கலன்' என்னும் சொல்லின் பொருள்.
5. ஏட்டுக்கல்வியுடன் _ _ _ _ _ _ _ _ கல்வியும் பயில வேண் டும்.
6. திரு.வி.க. எழுதிய நூல்களுள் ஒன்று.
7. மா + பழம் என்பது _ _ _ _ _ விகாரம்.

1.

| | | | | |
|---|---|---|---|---|
| ஆ | ல | ங் | கு | டி |

2.

| | | |
|---|---|---|
| க | ல் | வி |

3.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நீ | தி | நெ | றி | வி | ள | க் | க | ம் |

4.

| | | | | |
|---|---|---|---|---|
| அ | ணி | க | ல | ன் |

5.

| | | | |
|---|---|---|---|
| இ | ய | ற் | கை |

6.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உ | ரி | மை | வே | ட் | கை |

7.

| | | | |
|---|---|---|---|
| தோ | ன் | று | ல் |

வ ட்டத்தில் சிக்கிய எழுத்துகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆ | ல் | றி | அ | ற் | வே | ற |

பழமொழி : அறிவே ஆற்றல்

## கலைச்சொல் அறிவோம்.

நிறுத்தக்குறி – Punctuation
அணிகலன் – Ornament
திறமை – Talent
மொழிபெயர்ப்பு – Translation
விழிப்புணர்வு – Awareness
சீர்திருத்தம் – Reform


SHRI KRISHNA ACADEMY

- CREATIVE QUESTIONS :
  ONE MARKS, TWO MARKS & FIVE MARKS AVAILABLE in ALL SUBJECTS.
- MATERIALS(GUIDE) FOR
  V-STD, VIII-STD AVAILABLE in ALL SUBJECTS.

→ For MORE DETAILS - 99655 31727 , 94432 31727